# கட்டுவன பிரதேச சபை
# ஹம்பாந்தோட்டை மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 02 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 02 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஜுலை 31 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, கட்டுவன பிரதேச சபை 2012 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுவன பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின்போது அமுலாக்கப்பட்ட 39 செயற்திட்டங்களுக்குப் பெற வேண்டிய மூலதன பெறுவனவுகளான ரூபா 20,339,183 கணக்கிலிடப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு முடிவில் விலைப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தபோதும், கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாத 50 வேலைகளுக்குக் கொடுப்பனவு செய்ய வேண்டிய ரூபா 29,198,156 ஆண்டு முடிவில் கொடுப்பனவு செய்ய வேண்டிய செலவினமாகக் கணக்கிலிடப்படவில்லை.

**2.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 5,167,843 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 939,142 ஆகும்.

**2.2 வருவாய் நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன**

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா’000 | ரூபா’000 | ரூபா’000 |
| (i) | தீர்வையும் வரியும் | 35 | 23 | 01 |
| (ii) | குத்தகை வாடகை | 13,515 | 9,738 | 818 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,182 | 1,281 | 07 |
| (iv) | பிற வருவாய் | 30,775 | 31,014 | 10,986 |

**2.2.2 தீர்வையும் வரியும்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134(1) ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட முன்னேறிய இடங்களை இனங்கண்டு அதற்கேற்ப தீர்வையையும் வரியையும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.2.3 குத்தகை வாடகை**

**பின்வருவன அவதானிக்கப்பட்டன.**

(அ) சபைக்குச் சொந்தமான மித்தெனியா, கட்டுவன, கிரம, கரவெட்டி, வராபிட்டிய, உடகொமடிய, அலுபொத்தெனிய ஆகிய பொதுச் சந்தைகள் 1988 பிரதேச சபைகள் (நிதியும் நிர்வாகமும்) 177 மற்றும் 178 ஆம் விதிகளுக்கமைய கேள்விகள் கோரப்பட்டுக் குத்தகைக்கு வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு முடிவிலான கடை வாடகை நிலுவை ரூபா 818,065 ஆகும். அதனை அறவிடுவதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. 2013 ஜுலை 19 இல் உள்ளவாறு வாடகை நிலுவையில் ரூபா 149,675 அறவிடப்பட்டிருந்தது.

### 2.2.4 நீர்க்கட்டணம்

மீளாய்வாண்டு முடிவில் நீர்க்கட்டண நிலுவை ரூபா 4,737,232 ஆகும். இதனை அறவிடுவதற்குப் போதிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை 2013 ஜீலை 19 இல் உள்ளவாறு ரூபா 1,420,013 அறவிடப்பட்டதாகத் தலைவர் எனக்கு அறிவித்திருந்தார்

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்.

மாகாண சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,019,873 நீதிமன்றத் தண்டப்பணமும் ரூபா 3,732,081 முத்திரைக் கட்டணமும் பெறப்பட வேண்டியிருந்தது. இத் தொகையில் முறையே ரூபா 516,340 மற்றும் ரூபா 2,699,540 என்பன 2013 ஜுலை 19 இல் உள்ளவாறு அறவிடப்பட்டிருந்ததாகத் தலைவர் எனக்கு அறிவித்திருந்தார்.

### 2.3 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

சபைக்குரிய 2 டிறக்டர்கள் நெடுங்காலமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. அச் சொத்துக்களை 2003 ஜனவரி 03 ஆந் திகதிய 353 (5) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கைதவிர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

**பின்வருவன அவதானிக்கப்பட்டன.**

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 19(1)(1) பிரிவின் பிரகாரம் உள்ளூராட்சி ஆணையாளரின் எழுத்து மூல அங்கீகாரமின்றி 11 பிரதீயீட்டு சுகாதாரத் தொழிலாளர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டு ரூபா 806,778, பிரதீயீட்டு வீதித் தொழிலாளர் 4 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டு ரூபா 417,609, கெப் வண்டிச் சாரதியாக நியமனம் வழங்கப்பட்டு ரூபா 37,794 எனச் சம்பளமும் படியுமாக சபையின் நிதியிலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மாவட்ட சாகித்திய விழா 2012 ஒக்டோபர் 09 ஆந் திகதி நடைபெற்றதாகவும் அதற்கான விரிவுரைக் கட்டணம், போக்குவரத்து மற்றும் தங்குமிடக் கட்டணமாக ரூபா 25,000 செலவிடப்பட்டதாகவும் குறிப்பிட்டு சபை அங்கத்தவர் ஒருவர் விடுத்த வேண்டுகோளுக்கமைய 2012 ஒக்டோபர் 17 அன்று அந்த அங்கத்தவருக்கு ரூபா 25,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

i. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132(ஓ) பிரிவின் பிரகாரம் இதற்கென அமைச்சரின் எழுத்து மூல அங்கீகாரம் பெறப்படவில்லை.

ii. கொடுப்பனவு உறுதிச் சான்றுடன் ரூபா 25,000 செலவிட்டதை உறுதி செய்யும் விலைப்பட்டியல் சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) 2012 மே 24 ஆந் திகதியன்று 252 ± 6508 இலக்க கெப் வண்டியைப் பழுது பார்ப்பதற்கு ரூபா 2,112,564 செலவிடப்பட்டிருந்தது. எனினும், 1988 பிரதேச சபைகள் (நிதியும் நிர்வாகமும்) 179 ஆம் விதியின் பிரகாரம் கெப் வண்டியைப் பழுதுபார்த்த நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ளப்படவில்லை.

(உ) 2012 ஆகஸ்ட் 24 ஆந் திகதியன்று 252 ± 6508 இலக்க கெப் வண்டிக்கு 4 எலோவீல்களைக் கொள்வனவு செய்வதற்கென ரூபா 47,040 செலவிடப்பட்டிருந்தது. எனினும், அதன் பொருட்டு 1988 பிரதேச சபைகள் (நிதியும் நிர்வாகமும்) 177,178 ஆம் விதிகளின் பிரகாரம் கூறு விலைகள் கோரப்படவில்லை.

(ஊ) 2006 ஏப்ரல் 25 ஆந் திகதிய 06/2006 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு பதவி வகைப்படுத்தல் மற்றும் சம்பளத் தொகுதி என்பவற்றின் அடிப்படையில் அல்லாது சம்பளம் வழங்கப்பட்டமையால் பிரதேச சபையின் நூலக உதவியாளர்களாகப் பணியாற்றும் 5 ஊழியர்களுக்கு 2012 ஆம் ஆண்டின்போது சம்பளமும் படியுமாக ரூபா 14,176 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.